**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 25/2022**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 03.03.2026 | | |
| பெயர்: | ராஜேஸ்வரி<br>(PW–1 Chief ) | கணவர் பெயர்: | மூர்த்தி |
| கிராமம்: | சீர்காழி டவுன் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 56/2026 |

**<u>முதல் விசாரணை : 03.03.2026</u>**

நான் இவ்வழக்கின் 1ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 19.11.2016 தேதியிட்ட வைத்தீஸ்வரன்கோயில் காவல் நிலையத்தாரால் வழங்கப்பட்ட சான்று அசல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 14.12.1997 தேதியிட்ட இறந்துபோன மூர்த்தியின் வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 3ம் வாதியின் குடும்ப அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. 1ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்

**வா.சா.ஆ.4** ஆகவும்

5. 1ம் வாதியின் வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகவும்

6. 14.02.2014 தேதியிட்ட 4ம் வாதியின் பிறப்புச் சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.